பின்தங்கிய தாலுக்காக்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள்.

186— (*வினா எண். 20371) திரு. எஸ். டி. உக்கம்சந்த் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தமிழக அரசு அறிவித்துள்ள பின்தங்கிய தாலுக்காக்களில் எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளில் அரசு தொழிற்சாலைகள், கூட்டுறவுத் தொழிற்சாலைகள் யாவை ?

(இ) மதுராந்தகம் வட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் யாவை ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ): தமிழக அரசு 33 வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாக அறிவித்துள்ளது. இவ்வட்டங்களில் 41 நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் துவக்கப்பட்டுள்ளன. அவைகளில் அரசு தொழிற்சாலைகள் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் பின்வருமாறு :—

(1) அரசு தொழிற்சாலைகள்	2
(2) கூட்டுறவு தொழிற்சாலைகள் ..	7
(3) அரசு தனியார் கூட்டு தொழிற்சாலை	1
ஆக மொத்தம் ..	10

(இ) மதுராந்தகம் வட்டத்தில் துவங்கப்பட்டுள்ள பெரிய மற்றும் நடுத்தர தொழில், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மதுராந்தகம்.

திரு. ஏ.சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, தொழில்கள் பெருக வேண்டும் என்றுதான் தமிழக அரசு சென்ற ஆண்டு பின் தங்கிய தாலுக்காக்களை அறிவித்தது. அதைப்போலவே இந்த ஆண்டும் பின் தங்கிய தாலுக்காக்களை அறிவிக்க அரசு ஆயத்தமாக உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரது ஊர் ஒன்றும் பின் தங்கிய பகுதி அல்ல.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS